மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்
முன்னிலை – செல்வி. அ. இலக்கியா, பி.பி.ஏ., எல்எல்.பி.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சாத்தூர்.
2025ம் ஆண்டு ஜுலை திங்கள் 04ம் நாள் வெள்ளிக்கிழமை
இடைநிலை மனு எண்.04/2024
இன்
அசல் வழக்கு எண்.90/2023
-------

ராஜேஸ்குமார் .. 2ம் மனுதாரர்/2ம் பிரதிவாதி

/எதிர்/

சுப்பாராஜ் .. எதிர்மனுதாரர்/வாதி

இந்த மனுவானது இறுதியாக என் முன்பாக 23.06.2025 அன்று விசாரணைக்காக வந்த போது 2ம் மனுதாரர்/2ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. N. V. இராம்ஜெத்கோபால்சாமி, பி.ஏ., எல்எல்.பி., அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. C. முத்துக்கண்ணு, பி.ஏ., பி.எல்., அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரை, மனு, அபிடவிட்டு மற்றும் எதிருரை ஆகியவற்றைப் பரிசீலித்தும் இதுநாள் வரையில் என் சீரிய பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்,

**உத்தரவு**

இந்த மனுவானது மனுதாரர்/எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதிக்கு எதிராக கடந்த 04.03.2024ம் தேதி பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து உத்தரவிட வேண்டி கட்டளை 9 விதி 7 உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் மனுதாரரால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **2ம் மனுதாரர்/2ம் பிரதிவாதி தரப்பு மனுவின் சுருக்கம்**–

**2.1.** மனுவில் 2ம் மனுதாரர். அசல் வழக்கில் 2ம் பிரதிவாதி. தாவா அசல் வழக்கினை வாதி, தன்னை இறந்துபோன ராமமூர்த்தியின் சட்டப்படியான இரண்டாம் நிலை வாரிசு என விளம்புகை செய்யக்கோரி தாக்கல் செய்துள்ளார். தாவா அசல் வழக்கில் மனுதாரர் தரப்பில் எதிருரை தாக்கல் செய்ய கடந்த 04.03.2024ம் தேதி

வாய்தா ஏற்பட்டிருந்தது. மனுதாரர் 01.03.2023 ம் தேதியிலிருந்து கடுமையான காய்ச்சல் ஏற்பட்டு உடல்நலக்குறைவின் காரணமாக பாதிக்கப்பட்டு இருந்தபடியால் அவர்களது வழக்கறிஞரை நேரில் சந்திக்க இயலவில்லை. எனவே 04.03.2024 ம் தேதி நீதிமன்றத்தில் நேரில் ஆஜராக இயலவில்லை. மனுதாரர் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய இயலாமல் உள்ளது. எனவே அன்றையதினம் மனுதாரர்களுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பித்துள்ளது. இது வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல. தெய்வாதீனமாக ஏற்பட்டதாகும். இவ்வழக்கில் மனுதாரருக்கு நல்ல கட்சி உள்ளது. அவற்றை மெய்ப்பிக்கவும், எதிர்மனுதாரர்/ வாதி தரப்பு கட்சியை பொய்பிக்கவும் தாவா அசல் வழக்கில் 04.03.2024 ம் தேதி ஏற்பட்ட ஒரு தலைபட்ச உத்தரவை ரத்து செய்து உத்தரவிட வேண்டியதாக உள்ளது. இல்லாவிட்டால் மனுதாரருக்கு ஏராளமான கஷ்ட நஷ்டம் ஏற்படக்கூடும். எனவே மனு தாக்கல்.

3. **<u>எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்–</u>**

**3.1.** இதனடியில் வியக்தமாய் ஒப்புக்கொள்ளப்படும் சங்கதிகள் தவிர ஷை மனுவில் குறிப்பிட்டுள்ள இதர சங்கதிகள் யாவும் உண்மைக்குப் புறம்பான, பொய்யான காரணங்களை கூறி மனு தாக்கல் செய்துள்ளது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகும். மனுதாரர்/2 ம் பிரதிவாதி இவ்வழக்கை காலம் தாழ்த்த வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் தான் எதிருரை தாக்கல் செய்ய போதிய கால அவகாசம் கொடுத்தும் கால விரையம் செய்ததால்தான் நீதிமன்றத்தால் ஒருதலைபட்சமாக்கப் பட்டுள்ளார். அசல் வழக்கின் வாதி 80 (தற்போதைய) வயதுமிக்க மூத்த குடிமகன் ஆவார். அசல் வழக்கின் 1 ம் பிரதிவாதியும், இம்மனுவின் மனுதாரர்/2 ம் பிரதிவாதியும் கூட்டு சேர்ந்து கொண்டு எதிர்மனுதாரர்/வாதியை மூத்த குடிமகன் என்று கூட பாராமல் வீண்ட கஷ்ட, நஷ்டப்படுத்த வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தினாலும், அசல் வழக்கை காலதாமதப்படுத்த வேண்டுமென்ற கெட்ட நோக்கத்தில் பொய்யான காரணங்கள் கூறி தாக்கல் செய்துள்ள மனுவை எதிர்மனுதாரர்/வாதியின்

செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டப்படுகிறது.

**4.** மனுதாரர் மனுவில் கோரியுள்ள பரிகாரம் அவருக்கு கிடைக்கத் தக்கதா?

**5.** மனுதாரர் தரப்பில் எந்த சாட்சியும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

**6.** **தீர்வு**

**6.1.** மனு பரிசீலிக்கப்பட்டது. மனுவில் மனுதாரர். அசல் வழக்கில் 2ம் பிரதிவாதி. 04.03.2024ம் தேதியில் மனுதாரர்/1ம் பிரதிவாதிக்கு எதிராக பிறப்பித்த ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து உத்தரவிட வேண்டி தாக்கல் செய்துள்ள மனுவிற்கு மனுதாரர் கூறும் காரணம் என்னவென்றால், 01.03.2023ம் தேதியிலிருந்துமனுதாரருக்கு கடுமையான காய்ச்சல் ஏற்பட்டு உடல்நலக்குறைவின் காரணமாக மேற்படி விபரங்களை அவரது வழக்கறிஞரை சந்தித்து தெரிவிக்க இயலாமல் போய்விட்டது. எனவே மனுதாரருக்கு எதிராக அன்றைய தினம் ஏற்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து உத்தரவிட வேண்டி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது,

**6.2.** எதிர்மனுதாரர் தன்னுடைய எதிருரை ஆட்சேபணையில், அசல் வழக்கின் வாதி 80 வயதுமிக்க மூத்த குடிமகன் என்றும், வாதி மூத்த குடிமகன் என்று கூட பாராமல் அசல் வழக்கின் 1ம் பிரதிவாதியும், இம்மனுவின் மனுதாரர்/2ம் பிரதிவாதியும் கூட்டு சேர்ந்து கொண்டு அசல் வழக்கை காலதாமதப்படுத்த வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் பொய்யான காரணங்கள் கூறி தாக்கல் செய்துள்ள மனு தள்ளுபடி செய்யுமாறு வேண்டப்பட்டுள்ளது.

**6.3.** மனுதாரருக்கு 01.03.2023 அன்று கடுமையான காய்ச்சல் ஏற்பட்டதால் நீதிமன்றததில் ஆஜராக இயலவில்லை என்று சொல்லியுள்ள காரணம் குறித்து மருத்துவர் சான்றிதழ் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை. மேற்படி தேதியில் மனுதாரர் தோன்றாத் தரப்பினராக இருந்து வருவதற்கு சொல்லியுள்ள காரணம் போதுமானதாக இல்லை. இருந்த போதிலும் வழக்கின் சூழ்நிலை மற்றும்

சங்கதிகளை கருத்தில் கொண்டு மனுதாரருக்கு ஒரு வாய்ப்பளிப்பது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என இந்நீதிமன்றம் கருதுவதால் எதிர்மனுதாரருக்கு ஏற்பட்ட கால விரயத்திற்கும், அவரது வயது மூப்பை கருத்தில் கொண்டும் மனுதாரர் செலவுத் தொகை வழங்க வேண்டுமென்ற நிபந்தனையுடன் இந்த மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

**7. இறுதி முடிவு**

இறுதியாக, மனுதாரர், எதிர்மனுதாரருக்கு செலவுத் தொகை ரூ.1000/-ஐ, 14.07.2025 ம் தேதிக்குள் செலுத்த வேண்டும் என்றும், தவறும்பட்சத்தில் இம்மனு தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது. அழைக்க வாய்தா 14.07.2025.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக கூறப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2025 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 04-ம் நாள் கையொப்பமிட்டு, இந்நீதிமன்றத்தால் அவையறிய பகரப்பட்டது.

ILAKKIYA Digitally signed by ILAKKIYA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்துார்.

**சாட்சி, சான்றாவணங்கள்**

**மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்**

இல்லை

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்**

இல்லை.

ILAKKIYA Digitally signed by ILAKKIYA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்துார்.

மாவட்டஉரிமையியல் நீதிமன்றம்,
சிவகாசி
இ.ம.எண்.04/2024
இன்
அ.வ.எண்.90/2023
**உத்தரவு**
நாள்–04.07.2025.